தினமணி

## ஏமாற்றம் அளிக்கிறது:விவசாயிகள் கருத்து

First Published : 27 Mar 2012 04:26:26 AM IST

திருச்சி, மார்ச் 26 : விளை பொருள்களுக்கு உரிய விலை உயர்வு உள்ளிட்ட அறிவிப்புகள் இல்லாமல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை ஏமாற்றத்தை அளிக்கிறது என விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலர் ஆறுபாதி கல்யாணம் கூறியது:

விவசாயிகளின் வருமானத்தை 3 மடங்காக உயர்த்துவோம் என அரசு கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே தெரிவித்தது. ஆனால் அதற்கான அறிவிப்புகள், திட்டங்கள் எதுவும் இல்லை. வேளாண் உற்பத்திப் பெருக்கம்தான் முதன்மைபடுத்தப்படுகிறதே தவிர விவசாயிகளின் விளை பொருள்களுக்கு ஆதாயமான விலை வழங்குவது குறித்து எந்த அறிவிப்பும் இல்லை. நெல்லுக்கு ஊக்கத் தொகை வழங்க ரூ.200 கோடி ஒதுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது போதுமானது அல்ல. இதை ரூ.2,000 கோடியாக உயர்த்தி, நெல்லுக்கு ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு ரூ.400 வழங்க வேண்டும்.

கரும்புக்கு டன்னுக்கு ரூ.2,500 வழங்கப்படுமென அதிமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்தது. ஆனால், தற்போது ரூ.2,100 வழங்குவதும் போதுமானதல்ல என்றார் அவர்.

காவிரி நீர் பாசன விவசாயிகள் நலச் சங்க செயல் தலைவர் மகாதானபுரம் வி. ராஜாராம் கூறியது:

உழைப்புக்கேற்ற ஊதியம் என்பது விவசாயத்தில் இல்லை. மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அகவிலைப்படி உயர்வு வழங்கப்படுகிறது. ஆனால், இடுபொருள்கள் விலை உயர்வு, விவசாயத் தொழிலாளர்கள் கூலி உயர்வு மற்றும் இயந்திரங்களின் வாடகை உயர்வு ஆகியவற்றுக்கு ஏற்ப விளைபொருள்களின் விலை உயர்த்தப்படவில்லை.

விளைபொருளுக்கு உரிய விலை வழங்கினால்தான் விவசாயிகள் தங்களது குடும்பத்தை நடத்த முடியும் என்றார்.

## 1.5 லட்சம் பெண்களுக்கு ஆடுகள்; 12 ஆயிரம் பேருக்கு பசுக்கள்

First Published : 27 Mar 2012 03:51:55 AM IST



சென்னை, மார்ச் 26: இந்த நிதியாண்டில் 1.5 லட்சம் ஏழைப் பெண்களுக்கு தலா நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகளும், 12 ஆயிரம் பயனாளிகளுக்கு கறவைப் பசுக்களும் வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு நிலையான வருவாய் வாய்ப்பை ஏற்படுத்த கால்நடை - பால் உற்பத்தித் துறையின் வளர்ச்சி இன்றியமையாதது. தேர்தல் அறிக்கையில் முதல்வர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், கிராமப்புற ஏழை மக்களுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டில் மாநிலத்தில் பால் உற்பத்தி குறைவாக உள்ள கிராமங்களில் 12 ஆயிரம் பயனாளிகளுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசின் இந்த முயற்சி பெரும் உதவி புரிந்துள்ளது.

நிலமற்ற ஒரு லட்சம் ஏழை கிராமப்புற பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த தலா நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த முன்னோடித் திட்டங்கள் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2012-13-ம் ஆண்டில் மேலும் 12 ஆயிரம் பயனாளிகளுக்கு கறவைப் பசுக்களும், 1.5 லட்சம் ஏழைப் பெண்களுக்கு தலா நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்துக்கு 2012-13-ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் ரூ.244 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீவன உற்பத்தி: 2011-12-ம் ஆண்டில் 24 ஆயிரம் ஏக்கர் பரப்பில் தீவன உற்பத்தி செய்ய ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கு விவசாயிகளிடையே மகத்தான வரவேற்பு கிடைத்தது. இந்தத் திட்டம் 2012-13-ம் ஆண்டிலும் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நாட்டுக் கோழி வளர்ப்பு: வணிக ரீதியில் நாட்டுக் கோழி வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில் மாநிலம் முழுவதும் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். மேலும் நாமக்கல் பகுதியில் இருப்பதைப் போன்று, சங்கரன்கோவில் மற்றும் விழுப்புரம் பகுதிகளிலும் கறிக்கோழி மற்றும்

முட்டைக் கோழி வளர்ப்பை ஊக்குவித்து, கோழிப் பண்ணைகள் அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
20 புதிய கால்நடை மருந்தகங்கள்: 2012-113-ம் ஆண்டில் தேவைப்படும் இடங்களில் மேலும் 20 புதிய கால்நடை மருந்தகங்கள் மற்றும் 50 கால்நடை துணை மையங்கள் தொடங்கப்படும்.
கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு 2010-11-ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் காட்டிலும் இரு மடங்காக உயர்த்தி 2012-13-ம் ஆண்டில் ரூ.814.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10 லட்சம் விவசாயிகளுக்குப் பயிர் காப்பீடு

First Published : 27 Mar 2012 03:50:10 AM IST



சென்னை, மார்ச் 26: வரும் நிதியாண்டில் 10 லட்சம் விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவர் என்று பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.
காப்பீட்டுத் தொகையில் மாநில அரசின் பங்கு, விவசாயிகளுக்கு வழங்கப்படும் கூடுதல் இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றுக்காக அரசு ரூ.252.65 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. 2010-12-ம் ஆண்டில் 8.18 லட்சமாக இருந்த பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளின் எண்ணிக்கையானது, 2011-12-ம் ஆண்டில் 8.48 லட்சமாக உயர்ந்துள்ளது. வரும் நிதியாண்டில் 10 லட்சம் விவசாயிகளை பயிர்க் காப்பீட்டின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
நுண்ணீர் பாசனம்: 2011-12-ம் ஆண்டில் 1,12,500 ஏக்கர் பரப்பு நுண்ணீர் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. 2012-13-ம் ஆண்டில் 1.73 லட்சம் ஏக்கர் பரப்பில் இதனைச் செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டு, இதற்கான மானியமாக இந்த வரவு - செலவுத் திட்டத்தில் ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மானியத்தை நேரடியாக வழங்கி, நுண்ணீர் பாசனக் கருவிகளை நிறுவும் நிறுவனத்தை அவர்களே தேர்ந்தெடுக்கவும்,

மூன்றாவது அமைப்பின் ஆய்வுகளின் மூலமாக நிதியுதவி சரியாகப் பயன்படுத்தப்படுவதை கண்காணிக்கவும் வகை செய்யும் புதிய திட்டமுறை வரும் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.
நபார்டு கடன்: 2012-13-ம் ஆண்டில் நபார்டு கடன் மூலமாகச் சேமிப்பு, சந்தை வசதிகளை மேம்படுத்த, இந்த அரசு மேலும் ரூ.300 கோடி முதலீடு செய்யும். விவசாயிகள் - தனியார் துறை பங்கேற்பின் மூலமாக வேளாண்பொருள் பதப்படுத்தும் தொழில்களை தமிழக அரசு ஊக்குவிக்கும்.

## திருந்திய நெல் சாகுபடி பரப்பு 28 லட்சம் ஏக்கராக உயர்த்தப்படும்

First Published : 27 Mar 2012 03:49:16 AM IST



சென்னை, மார்ச் 26: திருந்திய நெல் சாகுபடி பரப்பு இந்த ஆண்டில் 28 லட்சம் ஏக்கராக உயர்த்தப்படுகிறது.
பண்ணை உற்பத்தித் திறன், பண்ணையையும் பயிர் சாகுபடியையும், பல்வகைப்படுத்துதல், விவசாயத்தை இயந்திரமயமாக்கல், சிறந்த நீர் மேலாண்மை, அறுவடைக்குப் பிந்தையை கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கு மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றில் தமிழக அரசு தொடர்ந்து கவனம் செலுத்தும்.
வேளாண் துறைக்கு ரூ. 3,804 கோடி: 2012-13-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் முன் எப்போதும் இல்லாத அளவாக வேளாண் துறைக்கு ரூ.3,804.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2011- 2012-ம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 105 லட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் இருக்கும். வரும் நிதியாண்டில் உணவு தானிய உற்பத்தி இலக்கு 120 லட்சம் மெட்ரிக் டன் என அரசு நிர்ணயித்துள்ளது.
வேளாண் வளர்ச்சி: 2012-12-ம் நிதியாண்டியில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 483 கோடி செலவில் புதிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
2012-13-ம் ஆண்டில் இந்தத் திட்டத்துக்காக ரூ.500 கோடி வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2011-2012 -ம் ஆண்டு 25.03 லட்சம் ஏக்கர் என்று இருந்த திருந்திய நெல் சாகுபடி பரப்பு 2012-13-ம் ஆண்டு 27.55 லட்சம் ஏக்கர் என உயர்த்தப்படும். வரும் ஆண்டில் 15 ஆயிரம் ஏக்கரில் நவீன கரும்பு சாகுபடி உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்.

தோட்டக்கலை: நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து செய்யும். 2012-13-ம் ஆண்டில் இந்தத் திட்டத்துக்கான ஒதுக்கீடு ரூ.150 கோடியாக இருக்கும். வரவு-செலவுத் திட்டத்தில் மாநிலத்தின் பங்காக ரூ.21.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## இறவை பட்டத்தில் எள் சாகுபடி செய்து பயனடையலாம்

First Published : 26 Mar 2012 11:26:00 AM IST

கரூர், மார்ச் 25: கடவூர் பகுதி விவசாயிகள் இறவை பட்டத்தில் எள் சாகுபடி செய்து பயனடையலாம் என்று வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் (பொறுப்பு) தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடவூர் வட்டாரத்தில் தற்சமயம் இறவை பட்டத்தில் எள் சாகுபடி விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்ய உள்ளனர். கோ 1, டி.எம்.வி. 3, 4 ஆகிய ரகங்களை தேர்வு செய்து இறைக்க வேண்டும். ஓர் ஏக்கருக்கு 2 கிலோ விதையை பயன்படுத்த வேண்டும்.

டிரைக்கோ டெர்மா விரிடி, பூஞ்சோலை மருந்து ஒரு கிலோவுக்கு 4 கிராம் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து விதைக்க வேண்டும். இதன்மூலம் விதை மூலம் பரவும் நோய்கள் கட்டுப்படுத்தப்படும். 30 செ.மீ. இடைவெளியில் செடிகள் இருக்க வேண்டும்.

ஒரு சதுர மீட்டருக்கு 11 செடிகள் இருக்க வேண்டும். 15 ஆம் நாள், 30 ஆம் நாள் என 2 முறை செடிகளில் களை நீக்க வேண்டும். அதன்பிறகு, அடி உரமாக தொழு உரம் 5 டன், யூரியா 44 கிலோ, சூப்பர் பாஸ்போட் 60 கிலோ, பொட்டாஷ் 16 கிலோ, ஒரு ஏக்கருக்கு இட வேண்டும். மாங்கனீஸ் சல்பேட் நுண்ணூட்ட உரம் ஏக்கருக்கு 2 கிலோ இட வேண்டும். 3 ஆம் நாள் உயிர் நீர் கொடுக்க வேண்டும்.

10 நாள்கள் கடந்த பின் அடுத்து நீர் பாய்ச்ச வேண்டும். தேவைக்கேற்ப 15 நாள் இடைவெளியில் நீர்ப் பாய்ச்சலாம்.

இத்தகைய தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் இறவை பட்ட எள் சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம் என்றார் அவர்.

## கால்நடை அறிவியல் தொழில்நுட்பப் பயிற்சி தொடக்கம்

First Published : 26 Mar 2012 11:34:12 AM IST

புதுக்கோட்டை, மார்ச் 25: புதுக்கோட்டையில் கால்நடை அறிவியல் பல்தொழில்நுட்பப் பயிற்சி தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகம், புதுக்கோட்டை மண்டல ஆராய்ச்சி மையம் இணைந்து, புதுகை அண்டக்குளம் சாலையில் உள்ள மண்டல ஆராய்ச்சி மையத்தில் நடத்தும் இந்த பயிற்சியைத் தொடக்கிவைத்த தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகத் துணைவேந்தர் ஆர். பிரபாகரன், பயிற்சிக் கையேட்டை வெளியிட்டுப் பேசியது:

தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மண்டல ஆராய்ச்சி மையத்தில் டிச 2011-ல் கால்நடை அறிவியல் பல்தொழில்நுட்ப மையம் தொடங்கப்பட்டது.

இதற்காக மத்திய அரசு ரூ. 1.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம், தேவையான உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது, பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளிப்பது, கறவை மாடு, வெப்ளாடு, செம்மறி ஆடு, வெண்பன்றி பண்ணை மாதிரிகள் அமைப்பது உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றார் அவர்.

விழாவுக்கு சென்னை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் ம. பாபு தலைமை வகித்தார். புதுகை கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன மேம்பாட்டுத் துணை இயக்குநர் கமல்ராஜ், உதவி இயக்குநர் வி.கே. வாசுதேவன், மாவட்டக் கால்நடைப் பண்ணையின் துணை இயக்குநர் ஹெச். டேனியல், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜ்குமார், வேளாண்மை அலுவலர் ஆர். ஜெகதீஸ்வரி, நேரு இளையோர் மைய ஒருங்கிணைப்பாளர் க. சதாசிவம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

முன்னதாக, புதுக்கோட்டை கால்நடை அறிவியில் பல்கலைகழக மண்டல ஆராய்ச்சி மையத் தலைவர் பி.என். ரிச்சர்டு ஜெகதீசன் வரவேற்றார். உதவிப் பேராசிரியர் மு. அண்ணாஆனந்த் நன்றி கூறினார். நிகழ்ச்சிகளை சென்னை கால்நடை மருத்துவ மைய உதவிப் பேராசிரியர் புகழேந்தி தொகுத்தளித்தார்.

கால்நடை மருத்துவப் பல்கலைகழக மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் 185 பயிற்சியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நபார்டு பயிர்கள் மேம்பாட்டு திட்டம் :பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2012,04:31 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் :நபார்டு முதன்மை பயிர்கள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

விழுப்புரம் அடுத்த கண்டமானடி கிராமத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு மேம்பாட்டு திட்டத்தின் தலைவர் தண்டபாணி தலைமை தாங்கினார். செயலாளர் சச்சிதானந்தம், பொருளாளர் கலியபெருமாள் முன்னிலை வகித்தனர்.

நபார்டு முதன்மை பயிர்கள் மேம்பாட்டு திட்டம் மற்றும் ஆரோவில் வாட்டர் ஹார்வேஸ்ட் தொண்டு நிறுவனத்தின் கீழ் காப்பீடு பிரிமியம் செலுத்திய அறிஞர் அண்ணா உழவர் மன்ற உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

ஆரோவில் வாட்டர் ஹார்வெஸ்ட் பணியாளர்கள் ஞானவேல், சண்முகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கண்டமானடி அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு பயிலும் 30 மாணவ, மாணவிகளுக்கு ஆசிரியர்கள் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு, காப்பீடு திட்டம் பற்றி விளக்கப்பட்டது.

**புகையிலை விதை எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2012,04:04 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : "புகையிலை தாவர விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய், சமையலுக்கு ஏற்றது என்பதால், அதன் உற்பத்தியை அதிகரிப்பது அவசியம்', என, தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை, மத்திய வேளாண் அமைச்சகத்தின் தேசிய எண்ணெய் வித்து

மற்றும் தாவர எண்ணெய் வளர்ச்சி குழுமம் சார்பில், தென்மண்டல ஆய்வுக் கூட்டம், வேளாண் பல்கலையில் நடந்தது. பல்கலை பதிவாளர் சுப்பையன் வரவேற்றார்.
பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி, துவக்கி வைத்து பேசியதாவது:
சர்வதேச அளவில், எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி செய்யும் நாடுகளில், சாகுபடி பரப்பளவு, உற்பத்தி, இறக்குமதி ஆகியவற்றில், இந்தியா முக்கிய நாடாக இடம்பெற்றுள்ளது. மொத்த சமையல் எண்ணெய் பயிர்கள் சாகுபடி நிலப்பரப்பில், இந்தியாவின் பங்கு, 12 முதல் 15 சதவீதமாக, உள்ளது. ஆனால், சமையல் எண்ணெய் பயிர்களின், மொத்த உற்பத்தியில்,ஏழு முதல் எட்டு சதவீதம் மட்டுமே, இந்தியாவின் பங்காக உள்ளது.
மொத்த சமையல் எண்ணெய் உற்பத்தியில், ஆறு முதல் ஏழு சதவீதம் மட்டுமே, இந்தியா பங்களிக்கிறது. இந்தியாவில், ஆண்டுதோறும் 16.8 மில்லியன் டன்கள் சமையல் எண்ணெய், பயன்படுத்துப்படுகிறது. இதில், 8.2 மில்லியன் டன்கள், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. சமையல் எண்ணெய் தேவையை இறக்குமதி மூலமாகத்தான், இந்தியா நிறைவு செய்கிறது. எனவே, எண்ணெய் உற்பத்தி திறனை, அதிகப்படுத்த வேண்டும்.
தற்போது, சர்வதேச அளவில் சமையல் எண்ணெய், தாவர எரிபொருள் உற்பத்தி செய்வதற்கு, அதிகமாக பயன்படுத்துவதால், உற்பத்தி செய்யப்படும் சமையல் எண்ணெய், சமையலுக்கு கிடைக்காமல் போகும் அபாயம், ஏற்பட்டுள்ளது. இது, சமையல் எண்ணெய் விலையையும் அதிகரிக்கும்.
அதிகரித்து வரும் மக்கள் தொகை மற்றும் வருமானம் ஆகியவற்றினால், சமையல் எண்ணெய் உட்கொள்ளும் அளவு, ஆண்டுதோறும் ஐந்து சதவீதம் அதிகரிக்கிறது. இதனால், உள்நாட்டு எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பது அவசியம்.
புகையிலை தாவர விதையிலிருந்து பெறப்படும் எண்ணெய், சமையலுக்கு ஏற்றது என்பதால், இதன் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும். இந்தியாவில், புகையிலை நான்கு முதல், 4.5 மில்லியன் எக்டர், நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு, 700 மில்லியன் கிலோ புகையிலை உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம், ஆண்டிற்கு, நான்காயிரத்து 400 கோடி ரூபாய், அன்னிய செலாவணியை ஈட்டுகிறோம்.
புகையிலை விதையில், 35 சதவீதம் எண்ணெய் சத்து உள்ளது. இதில், நிகோடின்' நச்சு இல்லாததால், சமையல் எண்ணெய்யாகவும், தாவர எரிபொருள் உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்தலாம். புகையிலை அதிக வருமானம் தரும் பயிர் என்பதால், விவசாயிகளும் விரும்பி சாகுபடி செய்கின்றனர்.
புகையிலை விதை எண்ணெய் குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு, தேசிய எண்ணெய் வித்து மற்றும் தாவர எண்ணெய் வளர்ச்சி குழுமம், நிதியுதவி அளிக்க வேண்டும். எண்ணெய்வித்து உற்பத்தியில், இயந்திரமயமாக்குதலின் அவசியத்தை, வலியுறுத்தி விதைப்பு, களையெடுத்தல், அறுவடை மற்றும் பல பயன்பாட்டிற்காக, புதிய பண்ணை இயந்திரங்கள் உருவாக்கப்பட

வேண்டும்.
இவ்வாறு, அவர் பேசினார்.
கூட்டத்தில், தேசிய எண்ணெய்வித்து மற்றும் தாவர எண்ணெய் வளர்ச்சி குழுமத்தின் இயக்குனர் பரமாத்மா, செயலர் கோபி, தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, கேரளா மாநில விஞ்ஞானிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## "இயற்கை வளங்களை காப்பது முக்கியம்' : வேளாண் கருத்தரங்கில் விஞ்ஞானி பேச்சு

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2012,06:06 IST

கரூர்: ""ஊழல் எதிர்ப்பை காட்டிலும் இயற்கை வளத்தை பாதுகாப்பதே முக்கியமானது,'' என இயற்கை வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பலேக்கர் பேசினார்.
இந்திய தொழில் கூட்டமைப்பு (சி.ஐ.ஐ.,) சார்பில், செலவில்லா இயற்கை வேளாண் குறித்த கருத்தரங்கம் கரூர், கோவை ரோட்டில் உள்ள கொங்கு திருமண மண்டபத்தில் நேற்று துவங்கியது. ஐந்து நாட்கள இந்த கருத்தரங்கம் நடக்கறது. தலைவர் சுசீந்திரன் தலைமை வகித்தார். கரூர் வைஸ்யா வங்கி ஏ.ஜி.எம்., சம்பத், லட்சுமி விலாஸ் வங்கி மேலாளர் மனோஜ், சி.ஐ.ஐ., துணைத்தலைவர் ராஜசேகரன் உள்பட பலர் பங்கேற்றனர்.
அகில இந்திய இயற்கை வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பலேக்கர் பேசியதாவது: தற்போது, ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தி வருகின்றனர். இதை விட முக்கியம் இயற்கை வளங்களை பயன்படுத்துவதும், சுரண்டலை தடுப்பதுமே முக்கியம். செலவில்லா இயற்கை வேளாண் முறையை கடைபிடிக்க வேண்டும். இதற்கு பெரிய அளவில் தொழில் நுட்பம் தேவையில்லை. நாடு முழுவதம் கடைபிடிக்கப்பட்டு வரும் வேளாண் உற்பத்தி யுக்தியிலிருந்து இது, முற்றிலும் மாறுபட்டது. இயற்கையானது, ரசாயனமற்றது.
நீடித்த நிலைத்த விவசாயம் என்பது இயற்கை வளங்களை பாதுகாப்பதில் தான் உள்ளது. குறைந்த செலவில் அதிக மகசூல் கிடைக்கும். சாகுபடிக்குத் தேவையான உரம், தண்ணீர் இயற்கையாக கிடைக்கிறது. தேவையான ஊட்டச்சத்து இருக்கிறது. இவ்வாவறு அவர் பேசினார்.

## விளைச்சல் இருந்தும் விலை இல்லை :விரக்தியில் மிளகாய் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2012,03:04 IST

ராமநாதபுரம் :மிளகாய்க்கு விளைச்சல் இருந்தும் விலை இல்லாததால், விவசாயிகள் விரக்தியின் உச்சத்துக்கு சென்றுள்ளனர். இதை அறிந்த வெளி மாவட்ட வியாபாரிகள் ராமநாதபுரத்தில்

முகாமிட்டுள்ளனர்.
ராமநாதபுரம் மாவட்டத்தில் 40 ஆயிரத்து 730 ஏக்கரில் முண்டு மிளகாய் பயிரிடப்படுகிறது. நூறு முதல் 110 நாட்கள் கொண்ட பயிரில், ஒரு ஏக்கருக்கு 300 முதல் 350 கிலோ மிளகாய் விளையும். இந்தியா முழுவதும் மவுசு உள்ள இந்த மிளகாய், இரண்டு மாதங்களுக்கு முன்பு 10 கிலோ, ரூ.2,000 முதல் 2,500 வரை விற்றது. விளைச்சல் இல்லாத காலங்களில், விலை உயர்ந்தது. தேக்கி வைக்க விவசாயிகளிடம் போதிய வசதி இல்லை.
இம்மாதம் முதல் மிளகாய் அறுவடை ஆரம்பித்துள்ளது. எதிர்பார்த்ததை விட இந்த முறை விளைச்சல் அமோகமாக உள்ளது. விளைச்சலை காரணம் காட்டி, வியாபாரிகள் விலையை குறைத்து விட்டனர். 10 கிலோ 800 முதல் 900 ரூபாய்க்கே வாங்கப்படுகிறது. இதை அறிந்த வெளிமாவட்ட வியாபாரிகள் ராமநாதபுரம் மாவட்டத்தில் முற்றுகையிட்டுள்ளனர்.
சேமனூர் மிளகாய் விவசாயி கர்ணன் கூறியதாவது: ஒரு மூடை மிளகாயை மார்க்கெட்டுக்கு கொண்டு வர 50 ரூபாய் செலவாகிறது. கூலியாக ஒருவருக்கு 250 ரூபாய் வரை கொடுக்கப்படுகிறது. எதிர்பார்த்த விலை இல்லாததால், விரக்தியில் உள்ளோம். அரசு சார்பில் மிளகாயை தேக்கி வைத்து விற்க நடவடிக்கை எடுத்தால், நன்றாக இருக்கும், என்றார்.

**கொள்முதல் மையங்களில் நெல் மூடைகள் தேக்கம் : நஷ்டத்தில் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2012,02:56 IST

கருத்தை பதிவு செய்ய

நரிக்குடி :உலக்குடி நெல் கொள்முதல் மையத்தில் 30 நாட்களுக்கும் மேலாக நெல் கொள்முதல் செய்யாததால் நெல் மூடைகள் தேக்கம் அடைந்துள்ளன.
நரிக்குடி அருகே உலக்குடி விவசாயிகள் பயனடையும் வகையில் அரசு நெல் கொள் முதல் மையம் துவக்கப்பட்டது.
30 க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் நெல் கொண்டு வந்துள்ளனர். ஒரு குவிண்டாலுக்கு 1,800 ரூபாய் எனவும் முடிவு செய்யப்பட்டு அரசு நெல் வாங்கியது.
ஆரம்பிக்கப்பட்ட ஒரு மாதத்தில் இதுவரை ஐந்து லோடு மூடைகள் மட்டுமே எடுத்துச் செல்லப்பட்டது.
இம்மையத்தில் 30 நாட்களுக்கும் மேலாக 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெல் மூடைகள் எடுக்கப்படமால் உள்ளன. இதில் பாதி மூடைகளுக்கு எடை போடப்பட்டுவிட்டன. பாதி மூடைகள் எடை போடமால் உள்ளன. அனைத்து மூடைகளும் திறந்த வெளியில் உள்ளதால் வீணாகி விடும் நிலையில் உள்ளன. நூறுக்கும் மேற்பட்ட மூடைகள் வெயில் தாக்குப் பிடிக்க முடியாமல் கிழிந்து நெல் தரையில் கொட்டியுள்ளது.

வெளி வியாபாரிகளிடம் நெல் மூடைகளை விற்றால், விவசாயிகளுக்கு ஒரு மூடைக்கு 150 ரூபாய் வரை நஷ்டம் ஏற்படும். எனவே அரசு நெல் கொள்முதல் மையத்தில் கொண்டு வந்து போட்டனர்.
சுப்பிரமணி: வெளி வியாபாரிகளிடம் விற்றால் ஒரு மூடைக்கு 600 ரூபாய் கிடைக்கும்.
ஆனால் அரசு நெல் கொள்முதல் மையத்தில் ஒரு மூடைக்கு 750 ரூபாய் வரை கிடைக்கும்.
இங்கே போட்டால் உடனடியாக பணம் கிடைக்கும், கடனை அடைத்து விடலாம் என நினைத்தேன்.
ஆனால் மூடைகள் கொண்டு வந்து 50 நாட்கள் ஆகி விட்டது. இன்று வரை நடவடிக்கை இல்லை.
குருவம்மாள் : நான் கொட்டக்காச்சியேந்தலிலிருந்து 53 மூடைகள் இங்கு 30 நாட்களுக்கு முன்பாக போட்டிருந்தேன்.
ஆனால் மூடைகளை இதுவரை எடுக்க வில்லை. தற்சமயம் மூடைகள் அனைத்தும் கிழிந்து நெல் முழுவதும் வீணாகி விட்டது.
இன்றைக்காவது எடுப்பார்கள் என தினமும் 20 கி.மீ., அலைந்து வருகின்றேன்.
பூமி, முத்தனேரி: இங்கு 157 நெல் மூடைகள் போட்டு 53 நாட்கள் ஆகிவிட்டன. வெளி வியாபாரிகளிடம் விற்று நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, என மூடைகளை எடுத்துக் கொள்கிறேன் என அதிகாரிகளிடம் கூறினாலும் எடுக்கவிட வில்லை.

---

தினகரன்

## நெல் வரத்து அதிகரித்தும் மின்தடையால் அரிசி விலை குறையவில்லை

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-26 10:54:05

சிவகங்கை: நெல் வரத்து அதிகரித்தும் ஆலைகளில் மின்வெட்டு, கூலியாட்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்னைகளால் அரிசி விலை எதிர்பார்த்த அளவு குறையவில்லை என வியாபாரிகள் தெரிவித்துளளனர்.
சிவகங்கை மாவட்டத்தில் இந்த ஆண்டு 93 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புதிய ரக நெல் சாகுபடி செய்த விவசாயிகள் ஹெக்டேருக்கு 5 டன் வரை மகசூல் செய்துள்ளனர். இதனால் புதுவயல், இளையான்குடி, தேவ கோட்டை, மானாமதுரை, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் முழுவதும் உள்ள தனியார் அரிசி ஆலைகளில் நெல் மூடைகள் வரத்து அதிகரித்துள்ளது. ஆண்டுதோறும் ஆலைகளுக்கு நெல் வரத்து துவங்கியதும் ஒரு வாரத்தில் அரிசி விலை கிலோவிற்கு ரூ.2 முதல் ரூ.5 வரை குறைவது வழக்கம்.

இந்த ஆண்டு ஆலைகளுக்கு நெல் வரத்து அதிகரித்த பின்னரும், எதிர்பார்த்த அளவு அரிசி விலை குறையவில்லை. இதனால் வர்த்தகர்கள், பொதுமக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். நேற்றைய விலை நிலவரம் டீலக்ஸ் பொன்னி&28, கல்சர் பொன்னி&23, ஐ.ஆர்.20&22, மணச்சநல்லூர்&32, இட்லி அரிசி&21, சீரகசம்பா&52, பாசுமதி&50 என்ற அளவில் உள்ளது.
அரிசி ஆலை உரிமை யாளர் ஒருவர் கூறுகையில், “அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் அரிசி உற்பத்தி அதிகமாக பாதிக்கப்படுகிறது. மின்தடையால் பாய்லரில் தண்ணீர் கொதிப்பதில் சுணக்கம் ஏற்படுகிறது.மேலும் நெல் அவிக்கும் பணிக்கும், உலர்த்துவதற்கும் தேவையான கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. கிராம மக்கள் தேசிய ஊரக வேலை திட்டத்திற்கு செல்வதால் அரிசி ஆலைகளுக்கு வேலைக்கு வருவதில்லை. மேலும் தொழிலாளர்களுக்கு தற் போது சம்பளமும் கூடுத லாக கொடுக்க வேண்டியுள்ளது. மின்வெட்டு, கூலியாட்கள் பற்றாக்குறை, நெல் கொள்முதல் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு அரிசி விலை குறையவில்லை“ என்றார்.

## எண்ணை வித்து பயிர் சாகுபடி விவசாயிகள் முன்வர வேண்டும்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-26 11:34:35

வேப்பூர்: கடலூர் மாவட்டம் நல்லூர் வட்டார வேளாண்மை துறை சார்பில் பயறு வகை சிறு தானியங்கள் சாகுபடி குறித்த விதை கிராம திட்ட பயிற்சி முகாம் வேப்பூர் அடுத்த ஐவதுகுடி கிராம ஊராட்சி தொடக்கப்பள்ளியில் நடந்தது. ஊராட்சி தலைவர் சேகர் தலைமை தாங்கினார். மாவட்ட வேளாண்மை குழு உறுப்பினர்கள் அமுதா ராஜேந்திரன், பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி வேளாண்மை அலுவலர் இளவரசன் வரவேற்றார்.
இதில் வேளாண்மை உதவி இயக்குனர் வெங்கடேசன் கலந்து கொண்டு பேசும் போது, விவசாயிகள் எந்த பயிர் சாகுபடி செய்தாலும் திட்டமிட்டு செய்ய வேண்டும். கரும்பு, மஞ்சள், மணிலா உள்ளிட்ட வணிக பயிர்களையே பெரும் பாலான விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். இதற்கு மாறாக திருந்திய நெல் சாகுபடி, பயறு வகைகளான உளுந்து, துவரை, பச்சை பயறு, எண்ணெய் வித்து பயிர்களை தேர்ந்தெடுத்து பயிரிட முன் வர வேண்டும். பயிர்களுக்கு செயற்கை உரங்களால் சுற்றுச் சூழல் பாதிப்பு உண்டாகிறது. இதை தவிர்க்க இயற்கை உரங்களை கொண்டு பயிரிட்டால் அதிக லாபம் பெறலாம் என தெரிவித்தார்.நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் சின்னமணி, ஒன்றிய வேளாண்மை குழு உறுப் பினர்கள் பூபதி, சாரங்கபாணி, சின்னத்துரை உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் விதை கிராம திட்டத்தின் தொழில்நுட்ப கையேடு வழங்கப்பட்டது.

தினத்தந்தி

## உற்பத்தி, சேவை வரிகள் உயர்வால் பணவீக்கம் 0.5% அதிகரிக்க வாய்ப்பு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

மத்திய பட்ஜெட்டில் உற்பத்தி மற்றும் சேவை வரிகள் உயர்த்தப்பட்டுள்ளதால், பணவீக்கம் 0.25 சதவீதம் முதல் 0.5 சதவீதம் வரை மட்டுமே உயர வாய்ப்புள்ளது என தலைமை பொருளாதார ஆலோசகர் கவுசிக் பாசு தெரிவித்துள்ளார். வரிகள் உயர்வால் பணவீக்கத்தில் அதிக தாக்கம் ஏற்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.

வரி வருவாய்

நாட்டின் வரி வருவாய் குறைந்து வரும் நிலையில், மத்திய அரசின் மானியச் சுமை மற்றும் இதர செலவினம் அதிகரித்து வருவதால், நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதி பற்றாக்குறை 5.9 சதவீதமாக உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த பற்றாக்குறையை கட்டுப்படுத்தும் வகையில் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி சேவை வரி மற்றும் உற்பத்தி வரிகளை தலா 2 சதவீதம் உயர்த்தியுள்ளார். இதனால், மத்திய அரசுக்கு கூடுதலாக ரூ.45,940 கோடி வருவாய் கிடைக்கும். இதனையடுத்து 2012–13–ஆம் நிதி ஆண்டில் நிதி பற்றாக்குறை 5.1 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், தொலை நோக்கு அடிப்படையில் பணவீக்கம் கட்டுக்குள் வரும் என பாசு கூறியுள்ளார்.

கடந்த 2010–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. இதனை கட்டுப்படுத்தும் வகையில், 2010 மார்ச் மாதத்திலிருந்து 2011 அக்டோபர் மாதம் வரையிலான காலத்தில் பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டியை 13 முறை உயர்த்தியது. 2011 டிசம்பரில் பணவீக்கம் 18.3 சதவீதமாக குறைந்தது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இப்பணவீக்கம் பிப்ரவரியில் 6.95 சதவீதமாக உள்ளது.

தவிர்க்க முடியாதது

நடப்பு நிதி ஆண்டில் பணவீக்கம் மாதத்திற்கு சராசரியாக 8 சதவீதமாக உள்ளது. இது, வரும் 2012–13–ஆம் நிதி ஆண்டில் 6.5 சதவீதமாக குறைய வாய்ப்புள்ளது. நிதி பற்றாக்குறையை கட்டுப்படுத்த வரி விகிதங்களை உயர்த்தியது தவிர்க்க முடியாத ஒன்று என கவுசிக் மேலும் கூறியுள்ளார்.

## கொலக்கம்பை பகுதியில் கடும் வெயில்: பயிர்களை காப்பாற்ற மோட்டார் மூலம் நீர் பாய்ச்சும் விவசாயிகள்

கொலக்கம்பை, மார்ச்.27–

கொலக்கம்பை பகுதி யில் கடும் வெயில் அடிப்பதால் பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் மோட்டார் கொண்டு தண்ணீர் பாய்ச்சும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.

விவசாயம்

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான தூதூர்மட்டம், டெராமியா, சட்டன், கிளிஞ்சடா, கரும் பாலம், கேத்தி பாலாடா உள் ளிட்ட பகுதிகளில் சுமார் ஆயிரம் ஹெக்டேர் பரப்பள வில் மலை தோட்ட காய்கறி பயிர்களான பீன்ஸ், கோஸ், கேரட், மேரக்காய் உள்ளிட்ட காய்கறி பயிர்களை விவசாயம் செய்து மேட்டுப்பாளைம், ஊட்டி உள்ளிட்ட பகுதி களுக்கு மொத்தமாக கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்ற னர்.

தற்போது கொலக்கம்பை பகுதியில் உள்ள பெரும் பாலான விவசாயிகள் தங்களின் விவசாய நிலங்களில் பீன்ஸ், கேரட் உள்ளிட்டவைகளை விவசாயம் செய்துள்ளனர். இந்த நிலையில் கடந்த பல நாட்களாக பகல் நேரங்களில் கடும் வெயில் அடித்து வருகிறது.

தண்ணீர் பாய்ச்சும் பணி

பல நாட்களாக கடுமையான வெப்பம் உள்ளதால் விவசாய நிலங்கள் வறண்டு காணப்படு கின்றன. இதனால் விவசாய பயிர்களும் காய தொடங்கி உள்ளது. இதனை பயிர்களை நம்பியுள்ள விவசாயிகள், தங்களின் பயிர்களை காப்பாற்ற ஓடைகளில் வரும் குறைந்த அளவு தண்ணீரை, மோட்டார் மூலம் பயிர்களுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

இந்த பயிர்கள் இன்னும் 20 நாட்களுக்குள் அறுவடைக்கு தயாராகும் நிலையில் உள்ளது. இதனால் அவற்றை பாதுகாக்க தண்ணீர் பாய்ச்சும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதே போன்று தேயிலையை நம்பியுள்ள தேயிலை விவசாயி களும் தங்களின் தேயிலை செடிகளுக்கு ஸ்பிரிங்லர் மூலம் நீர் பாய்ச்சி வருகின்றனர்.

கோவில்களில் சிறப்பு பூஜை

மிகவும் மேடான பகுதிகளில் உள்ள தேயிலை தோட்டங்களில் கடுமையாக வெயிலால் சிவப்பு நிற சிலந்தி பூச்சி தாக்குதல் அதிகரித்து உள்ளதால் தேயிலை விவசாயமும் பாதிப்படைந்து உள்ளது. இதன் காரணமாக மழை வேண்டி கொலக்கம்பை பகுதி மக்கள், விவசாயிகள் கோவில்களில் சிறப்பு பூஜை செய்து வருகின்றனர்.

## குன்னூர் தேயிலை ஏலத்தில் 86 சதவீத தேயிலை தூள் விற்பனை

*குன்னூர், மார்ச்.27–*

*குன்னூர் தேயிலை ஏலத்தில் 86 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.*

*தேயிலை ஏலம்*

*வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பினர் நடத்தும் தேயிலை ஏலம் குன்னூரில் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தில் அமைப்பின் உறுப்பினர்களாக உள்ளவர் கள் மட்டுமே பங்கு கொள்ள அனுமதிக்கப்படு கிறது.*

*உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் இந்த ஏலத்தில் பங்கு பெற்று வருகின்றனர். விற்பனை எண் 12–க்கான ஏலம் கடந்த 22, 23 ஆகிய தேதிகளில் நடை பெற்றது.*

*86 சதவீதம் விற்பனை*

*ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 60 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 7 லட்சத்து 64 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இலை ரகமாக வும், 2 லட்சத்து 96 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. உள்நாட்டு வர்த்த கத்தில் ஆந்திரா, கர்நாடகா, ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களின் வர்த்தகர்களின் பங்களிப்பு இருந்தது.அவர்களும் தரமான தேயிலை தூளை மட்டுமே வாங்கினர்.*

*ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்த வரை பாகிஸ்தான் மற்றும் ரஷ்யா நாட்டு வர்த்த கர்கள் கலந்து கொண்டனர். விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 86 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது.*

*விலை வீழ்ச்சி*

*இருப்பினும் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் விலை குறைவாக ஏலம் கேட்கப்பட்டதால், ரூ.2 விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக ரூ.122 இருந் தது.*

*ரூ.220 என்பது ஆர் தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக இருந்தது. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதரண வகை தேயிலை தூளுக்கு 50 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூளுக்கு 85 ரூபாயில் இருந்து 154 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை தேயிலை தூளுக்கு 55 ரூபாயில் இருந்து ரூ.58 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூளுக்கு 85 ரூபாயில் இருந்து 151 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*அடுத்த ஏலம்*

*விற்பனை எண் 13–க்கான ஏலம் வருகிற 29, 30ஆகிய தேதிகளில் நடக்கிறது. இந்த ஏலத்திற்கு 17 லட்சத்து 29 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*